**ஏப்ரல் - 4**

**"பகலிலே நடக்கிறவர்கள் போல, சீராய் நடக்கக்கடவோம்." - ரோம 13 : 13**

பண விஷயங்களில் மட்டுமல்ல, ஆனால் தன்னுடைய அயலாரை நடத்துகிறதிலும், சகோதரரை நடத்துகிறதிலும் ஒவ்வொருவரும் யோக்கியமாக இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னுடைய தேவனையும் அவருடைய உண்மையையும் குறித்துத் தான் செய்யும் அறிக்கைகளில் யோக்கியமாய் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். சோதனை இந்த முறையில் செய்யப்படுகிறது. தேவனுடைய தயவைவிட, மனுஷர் தயவை அதிகமாக விரும்புகிறவர்களும், அயோக்கியத்தனமாக ஒரு பொய்யை அறிக்கையிடவும், வெளிப்படையாகச் சொல்லவும் இஷ்டமுள்ளவர்களாய் இருப்பவர்களும் தங்களுடைய பொய்யிலே கைவிடப்படுவார்கள். தங்களுடைய நித்திய உரிமைகளை நாசம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இராஜ்யத்துக்குத் தகுதியற்றவர்களென்று தங்களையே நிரூபித்துக் கொண்டிருப்பார்கள் முடிவாக தகுதியாவதற்காக வேறு ஏதாயினும் இருந்தாலும். **-Z ’03, 122 (R 3181).**

தேவனுடைய ஜனங்கள் கபடமில்லாமல் ஜீவிக்க வேண்டும். அவர்களுடைய நடத்தை ஜீவனுள்ள தோற்றமாகவும், நீதியின் திருஷ்டாந்தமாகவும் இருக்க வேண்டும். நேர்மையான இருதயத்தோடு எல்லோருக்கும் அவரவர்களுக்குக் கொடுக்க வேண்டியதை அவர்கள் கொடுக்க வேண்டும். எந்த நேரத்திலும், எந்த சமயத்திலும் அவர்களுடைய நடத்தை மற்றவர்களால் பார்க்கப்பட்டால், அது அவர்கள் வெட்கப்படுவதற்குக் காரணமாக இருக்கக் கூடாதவாறு அவ்விதமாக இருக்க வேண்டும். ஆயிரவருஷ நாளில் நடக்கப் போவதைப் போலவும், அவர்கள் இப்பொழுது யோக்கியமாக நடக்க வேண்டும். **-P ’35, 61.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

பிலி 4:8; கொலோ 1:12,13; உன்ன 2:7,17; 1கொரி 13:12; வெளி 22:5; 1பேது 2:12; 2பேது 3:11,12; 2கொரி 6:7; எபே 6:13-18; 1பேது 4:7,8; 1தெச 5:4-8; யோவா 9:4.

**கோபுர வாசிப்பு :** **Z ’12, 287 (R 5097).**

**வினாக்கள் :** தேவனுடைய இராஜ்யத்தில் ஜீவிப்பது போல, இன்று நான் நடந்து கொண்டேனா? எந்தச் சூழ்நிலைகளில்? அதில் எது உதவியாகவும் அல்லது இடையூறாகவும் இருந்தது? பலன் என்ன?